மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1969-70-ல் மத்திய அரசின் ஒப்பளிப்பின் பேரில் ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து கடனாகக் கிடைத்த தொகையில் ரூ. 10 லட்சம் மத்திய தர வகுப்பினர் வீடு கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவு பிரிவு) மூலம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

Engineers in Electricity Board

*486. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of engineers of the Public Works Department working on deputation in 1969-70 and 1970-71 in the State Electricity Board;

(b) the terms and conditions of deputation; and

(c) total number of engineers absorbed in the regular service of the Electricity Board?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவையின் முன் ஓர் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, may I know whether any deputation met the present Hon. Minister or the previous Hon. Minister for Electricity and Expressed any grievances with regard to their service conditions?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சமீபத்தில் என்னை வந்து பார்த்தார்கள். இது இரண்டு இலாகாக்களும் சேர்ந்து முடிவு செய்யப்படவேண்டிய காரியமாகும். விரைவில் முடிவு செய்யப்படும்.

திருப்பூரில் தொழிற்சாலைகளுக்கு மின் சக்தி வழங்கல்

* 487 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரத் தொழிற்சாலைகளுக்குப் போதிய மின்சார அழுத்தம் இல்லாத குறைபாட்டை போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கோவை-ஈரோடு 66 கிலோ வோல்ட் கம்பி இணைப்பை 110 கிலோ வோல்ட் கம்பி இணைப்பாக மாற்றுவதற்கான வேலைகள் தொடங்கப்பெற்று நடந்து வருகின்றன. இவ்வேலைகள் பூர்த்தியானதும் திருப்பூரில் மின் அழுத்தத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் இருக்கும்.

@ 218—220-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 டிசம்பர் 16]

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்த வேலை எப்போது முடிவு பெறும் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதைப்பற்றி சரியாக விவரம் இல்லை. ஆனுல் கூடிய சீக்கிரத்தில் வேலை துவங்கும்.

Night service buses

* 488. *Q.* THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state;

(*a*) whether it is a fact that a large number of night service buses are to be operated in this State by the Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) நெடுந் தொலைவு வழித்தடங்களில் மேலும் 100 விரைவுப் பேருந்துகளை விடுவதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. பயணிகளின் எண் ணிக்கை நியாயமான அளவை எட்டினுல் அவற்றினுல் சில பேருந்துகள் இரவுப் பேருந்துப் பயணிகளுக்குப் பயன்படுத்தப் படலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, இந்த இரவு நேரத்தில் விடப்படும் பேருந்துகள் எல்லா மாவட்டங்களுக்கும் விடப்படுகின்றனவா ? எந்தெந்த மாவட்டங்களுக்கு விடப்படு கின்றன ? விட்டுப்போன மாவட்டங்களுக்கு விட தமிழக அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழகத்திலே உள்ள முக்கியமான நகரங்களுக்கு இந்த இரவு நேரப் பேருந்துகள் விடப்படுகின்றன. எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும், அல்லது மாவட்டங்களில் உள்ள முக்கிய மான நகரங்களுக்கும் விடலாம் என்று அரசு யோசனை செய்து வருகிறது. எங்கே விடவேண்டுமென்று சொன்னுல், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இரவு நேரங்களில் தனியார் பஸ்களை, டவுன் பஸ்களை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இரவு நேரங்களில் போகின்ற பேருந்துகள் பழுது அடைந்து பரிதாபமாக பாதிவழியில் நின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறேம். அதனுல் பயணிகள் அவதிப்படுவதைப் பார்க்கிறேம். ஆகையால், இரவு நேரங்களில் விடப்படும் பஸ்களையாவது சரியாக பழுது பார்த்து, நல்ல கன்டிஷனில் அனுப்ப அரசு தனி கவனம் செலுத்துமா ?